முருகப்பெருமான் துணை

**மகான் அல்லமாபிரபு அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**23.12.2023**, சனிக்கிழமை

1. ஞானிகள் மேலான மகா பூசை
ஞாலமதில் செய்து தேற்றமும்
ஞானிகளாகவே அடைய வாய்ப்பை
ஞானமாக அருளும் அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
அகிலமதில் சோபகிருது சிலைதிங்கள்
வரங்களென சப்தம திகதி காரிவாரம்
(சோபகிருது வருடம் மார்கழி மாதம் 07 ம் நாள், 23.12.2023, சனிக்கிழமை)
வழங்குவேன் அல்லமாபிரபு யானும்
3. யானும் துல்லிய ஆசிதன்னை
உலக நலம்பெற உரைப்பேன்
ஞானபண்டிதனின் வழிபாடுமுறை
ஞானம் தரும் மகா பலமாக இருக்க
4. இருக்கவே கலிவாழ் மக்கள்
எல்லோரும் அரங்கனை நாடி
கருத்தாக சரவண சோதி தரிசனம்
கண்டுமே மகாமந்திர தீட்சை
5. தீட்சைதனை அரங்கனிடம் ஏற்று
தினமும் இல்லில் செபதபங்கள்
தீட்சை வழி பூசையாகத் தொடர
தீங்கான முக்குண பேதங்கள் அகன்று
6. அகன்றுமே ஞானத் தெளிவு
அகிலத்தின் அனைத்துயிரையும்
வகைபட தன்னுயிர் போல் போற்றி
வாழ்த்தும் மகிழும் தயவு கூடி

7. கூடியே உலகம் தன்னில்
குருவருளால் கிட்டும் திருவருளை
அடைந்து சிறந்து நன்கு
அதன்படியே வாழ்ந்து நன்கு
8. வாழ்ந்துமே ஞானிகள் ஆகவே
வையகம் தன்னை காத்திடும்
தாழ்விலா வழிநடத்தும் வண்ணம்
தலைமைகள் தன்னை உருவாக்கி
9. உருவாக்கி அற்புதம் படைப்பர்
உலகமெல்லாம் ஞானவான்களை
குருவரங்கன் உருவாக்கிடவே
குவலயம் ஞானவான்கள் நிறைந்த
10. நிறைந்த ஞானத்தலைமை கண்டு
நீதிநெறி மாறாத ஆட்சி
மறை போற்றும் ஞான ஆட்சியாக
மனிதர்கள் ஆட்சி முடிவுற்று
11. முடிவுற்று மகான்கள் ஆட்சியதும்
மொழிகுவேன் உலகில் துவங்கி
இடர்கள் யாவும் விலகி ஓடும்
இயம்பிய துல்லிய ஆசி முற்றே

–சுபம்–